## இனிமையான குழந்தைகளே! ஒரே ஒரு தந்தையின் மகிமைதான் அளவிட முடியாதது ஆகும்,

கேள்வி: குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த படிப்பின் மீது மிகுந்த மதிப்பு இருக்க வேண்டும் லி ஏன்?

பதில்: ஏனெனில் முழு கல்பத்திலேயே ஒரே ஒரு முறை தான் தந்தை பரந்தாமத்திலிருந்து கற்பிப்பதற்காக வருகின்றார். மனிதர்கள் படிப்பதற்காக பாரதத்திலிருந்து அயல்நாட்டிற்குச் செல் கின்றனர், இது ஒன்றும் பெரிய விசயமில்லை. இங்கு படிப்பு கற்றுக் கொடுப்பவர் எவ்வளவு தூரத்திலிருந்து வருகின்றார்! ஆக குழந்தைகள் படிப்பின் மீது மிகுந்த மதிப்பு கொடுக்க வேண்டும். சிறிது சிரமம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. உங்களது கீதா பாடசாலையானது ஒவ்வொரு தெருவிலும் இருக்க வேண்டும், இல்லையெனில் அத்தனை பேரும் எப்படி படிப்பார்கள்? பாபாவின் அறிமுகம் அவசியம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிய குழந்தைகள் கூறுகிறீர்கள் லி இவர் யார்? இவர் சாது, சந்நியாசி போன்ற மனிதர் கிடையாது. இவர் தனிப்பட்டவர். மனிதன் என்றால் உடனேயே அறிந்து கொள்வர் லி இவர் இன்னார் சாது அல்லது சந்நியாசி என்று. இன்னார் மகாத்மா என்று பெயருடன் சேர்த்து கூறி விடுவர். இதை குழந்தைகள் மட்டுமே அறிவீர்கள். குழந்தை என்று ஆத்மாவைக் கூறப்படுகிறது. ஆத்மா தான் அனைத்தையும் அறிந்திருக்கிறது, சரீரம் அல்ல. ஆத்மா தான் இவர் இன்னார் என்று கூறுகிறது. இந்திரியங்களின் மூலம் அறிந்து கொள்கிறது. ஒருவேளை ஆத்மா இல்லையெனில் இந்த கண்கள் இயங்காது. அனைத்தையும் ஆத்மா தான் அறிந்திருக்கிறது.

இப்போது குழந்தைகள் நீங்கள் ஆத்ம அபிமானிகளாக ஆக்கப்படுகிறீர்கள். இந்த கர்மேந்திரியங் களின் மூலம் இந்த காரியத்தைச் செய்கிறேன் என்று ஆத்மா கூறுகிறது. உண்மையில் ஆத்மா ஆண் என்று கூறப் படுகிறது, பெண் அல்ல. ஆண் ஆகும், ஏனெனில் நாம் அனைவரும் சகோதர சகோதரர்கள். இப்போது நீங்கள் புது விசயங்களைக் கேட்கிறீர்கள். இங்கு வந்திருப்பது யார்? அவருக்கு எந்த மனித ரூபமும் கிடையாது. எல்லையற்ற தந்தை சிவபாபா, அவர் இவர் பிரம்மா மூலம் புரிய வைக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். சந்நியாசியாகிய இவரது ஆத்மா கூறுகிறது என்று கிடையாது. மனிதர்களுக்குப் பெயர், உருவத்தின் மீது தான் முழு கவனம் செல்கிறது. இவர் நமது எல்லையற்ற தந்தை என்று உங்களது புத்தி புரிந்திருக்கிறது. பிரம்மாவின் சரீரத்தின் மூலம் நமக்கு தனது ஆஸ்தியை கொடுக்கின்றார். இராஜயோகம் கற்பிக்கின்றார். அவர் அனைவருக்கும் தந்தை ஆவார். அனைவரையும் தூய்மையற்றதிலிருந்து தூய்மை ஆக்குபவர், மனிதர்களை மட்டுமின்றி, 5 தத்துவங்களையும் மாற்றுபவர். அனைவருக்கும் சத்கதி கொடுப்பவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை ஆவார். உலகில் மகிமைக்கு தகுதியானவர் என்றால் அது ஒரே ஒரு தந்தை மட்டுமே, வேறு யாரும் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கும் மகிமை செய்ய முடியாது. அவர்களுக்கு பிறந்த நாள் கொண்டாடி என்ன செய்யப் போகிறீர்கள்? லெட்சுமி, நாராயணனின் இணைந்த

ரூபமாகிய விஷ்ணு இப்போது எங்கு இருக்கின்றார்? லெட்சுமி, நாராயணன் மறுபிறவி எடுத்து எடுத்து இப்போது கடைசி பிறவியில் இருக்கின்றனர். மீண்டும் சிவபாபா இவர்களை தகுதியானவராக ஆக்கிக் கொண்டிருக்கின்றார். அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் அவர் ஒரே ஒருவர் தான். மகிமையும் அந்த ஒருவருக்கு மட்டுமே. அந்த பதீத பாவன் இன்றி இந்த உலகின் நிலை என்னவாக ஆகிவிட்டது? என்பதைப் பாருங்கள். இராதை, கிருஷ்ணர் எங்கு இருக்கின்றனர்? என்று கிருஷ்ண பக்தர்களிடம் கேட்டால் சர்வவியாபி என்று கூறுவர். இராதையின் பூஜாரி எங்கு பார்த்தாலும் இராதையோ இராதை என்று கூறுவார். எங்கு பார்த்தாலும் ஹனுமான் தான் என்று ஹனுமானின் பக்தர்கள் கூறுவர். ஆனால் கிடையாது. தந்தை தனது மகிமையை தானே செய்யமாட்டார். தனது நடிப்பின் மூலம் நிரூபணம் செய்கின்றார். வேறு யாருக்கும் மகிமை செய்ய முடியாது. லெட்சுமி, நாராயணன் தான் இராஜ்யம் செய்கின்றனர், சிறு வயதில் இராதை, கிருஷ்ணராக இருக்கின்றனர். அது அவர்கள் அடைந்த பலன். ஆக அவர்களுக்கு மகிமை எப்படி செய்ய முடியும்? பிரம்மாவிற்கும் மகிமை கிடையாது, விஷ்ணுவிற்கும் எந்த மகிமையும் கிடையாது. மகிமைக்குரியவர் ஒரே ஒருவர் ஆவார். அவர் தான் பதீத பாவன் என்று கூறப்படுகின்றார். விஷ்ணு யார்? என்பதை இப்போது குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். விஷ்ணுவிடம் சுயதரிசன சக்கரம் சூட்சும வதனத்தில் ஏன் காண்பிக்கப்பட்டிருக்கிறது? மனிதர் களுக்கு அதிக கைகள் இருக்க முடியாது. இல்லற மார்க்கத்தை நிரூபணம் செய்வதற்காக சூட்சும வதனத்திலும் 4 கைகள் காண்பித்திருக்கின்றனர்.

தந்தை கூறுகின்றார், இனிய குழந்தைகளே! நாம் 84 பிறவிகள் எப்படி எடுக்கிறோம்? என்பதை இப்போது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். உங்களது இல்லறம் தூய்மையாக இருந்தது. சர்வ குணங்கள் நிறைந்தவர்கள் ..... தாயும் நீயே, தந்தையும் நீயே...... என்று கோவில்களுக்குச் சென்று பாடுகின்றனர் அல்லவா! இந்த மகிமை தவறாகும். இந்த மகிமைக்குரியவர் ஒரே ஒருவர் தான். தேவதைகள் அல்ல. மகிமைகள் எதுவெல்லாம் இருக்கிறதோ அனைத்தும் ஒருவருடையதே. அவர் பரம்பிதா பரம் ஆத்மா ஆவார். பரம தந்தை, பரம ஆசிரியர், பரம சத்குரு அகால் (பிறப்பு, இறப்பு இல்லாதவர்) என்று கூறுகின்றனர் அல்லவா! அவரை நினைவு செய்கின்றனர், அவர் அழிவற்றவர் ஆவார். சிவபாபாவை நந்தியின் (காளை) மீது காண்பிக்கின்றனர். அவர்கள் அழிவற்ற சிம்மாசனமாக (அகால்தக்த்) காண்பிக்கின்றனர். சிவபாபா எப்படியிருக்கின்றார்? என்பது யாருக்கும் தெரியாது. கோவில்களில் வைத்திருப்பது அவருடைய நினைவுச் சின்னமாகும். அவர் ஞானக் கடல், பதீத பாவன் ஆவார். அவருக்கு மனித உடல் வேண்டும் அல்லவா! இந்த பிரம்மா தான் அவரது சிம்மாசனம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். தர்ம ஸ்தாபகர்களுக்கு என்ன மகிமை இருக்கிறது! அவர்கள் வந்து தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றனர், அவ்வளவு தான். அவர்கள் யாருக்கும் ஜீவன்முக்தி கொடுப்பது கிடையாது. மோட்சம் வேண்டும், மீண்டும் பிறவி யில் வரவே கூடாது என்று மனிதர்கள் கூறுகின்றனர். அந்த தர்ம ஸ்தாபகர்கள் தனது தர்மத்தைச் சார்ந்தவர்களை கீழே அழைத்து வருவதற்கு நிமித்தம் ஆகிறார்கள். அவர்கள் வந்து தங்களது தர்மத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும். நாடகத்தின் பாகம் இருக்கிறது. யாரெல்லாம் வருகிறார் களோ அவர்கள் மறுபிறவி எடுத்தே ஆக வேண்டும், இந்த ஸ்தாபனை தந்தை செய்கின்றார், அவர் அனைவரை யும் தூய்மை

இல்லாதவர்களை தூய்மை ஆக்கக் கூடியவர், வேறு யாரும் தூய்மை ஆக்குவது கிடையாது. அவர்கள் அவரவர்களது பாகம் நடிப்பதற்காகத் தான் வருகின்றனர். சதோ, இரஜோ, தமோவிற்கு வந்தே ஆக வேண்டும், அவர்கள் தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றனர், அவ்வளவு தான். என்ன போதனைகளை (அறிவுரை) கொடுத்தார்களோ அதுவே பிறகு சாஸ்திரங் களாக ஆகிவிடுகிறது. யார் தர்மத்தை ஸ்தாபனை செய் கிறார்களோ அவர்களே பிறகு பாலனை யும் செய்ய வேண்டும். யாரும் திரும்பி செல்வது கிடையாது. அனைவரும் இந்த நேரத்தில் வித விதமான பெயர், உருவத்தில் இங்கு தூய்மையற்ற உலகில் இருக்கின்றனர். முதல் நம்பரில் லெட்சுமி, நாராயணனைப் பாருங்கள். அவர்களும் இப்போது இங்கு இருக்கின்றனர். பிரஜாபிதா பிரம்மாவின் மூலம் பிராமணர்களைப் படைக்கின்றார். பிறகு இவர்கள் சென்று இராதை, கிருஷ்ணராக ஆவார்கள். எதுவரை சிவபாபா வரவில்லையோ அதுவரை யாரும் தூய்மை ஆக முடியாது. அனைத்து மகிமைகளும் அந்த ஒருவருக்கே. மகிமைக்குரியவர் அவர் ஒருவரே. சிவாய நமஹ, நீங்கள் தான் தாய், தந்தையாக இருக் கிறீர்கள் ...... என்று கூறவும் செய்கிறீர்கள். அனை வரையும் விட அதிக மகிமை அந்த தந்தையினுடையது தான். ஓ இறை தந்தையே! என்று தந்தையைத் தான் அழைக்கின்றனர். இந்த நாடகம் ஏற்கெனவே உருவாக்கப் பட்டிருக்கிறது. எப்போது உலகம் பழையதாக ஆகிறதோ அப்போது தந்தை வருகின்றார். மூலவதனம், சூட்சும வதனம், ஸ்தூல வதனம் லி மூன்று லோகங்களின் ஞானம் கொடுக்கின்றார். ஞானம் ஒரே ஒரு முறை தான் கிடைக்கிறது. அவர் ஞானக் கடல் என்று கூறப்படுகின்றார். மற்றபடி இந்த சூரியன், சந்திரன் போன்றவைகள் எல்லையற்ற மேடைக்கு வெளிச்சம் கொடுக்கும் விளக்குகளாகும். அந்த இரவு, அந்த பகல், இது மேடையில் விளக்குகள். சூரிய தேவதாய நமஹ என்று கூற முடியாது. பிரம்மா, விஷ்ணு, சங்கர் தான் தேவதைகள். மூலவதனத்திலிருந்து ஆத்மாக்கள் இங்கு வருகின்றன எனில் நேரடியாக கர்பத்திற்குச் சென்று விடுகிறது, சூட்சுமவதனத்திற்குச் செல்வது கிடையாது. நேரடியாக சத்யுகத்தில் கர்ப மாளிகைக்கு வரும். அங்கு எந்த பாவ காரியங்களும் ஏற்படுவது கிடையாது. இங்கு பாவங்கள் நிகழ்வதால் ஐயோ ஐயோ என்று கதறுகின்றனர். தர்மராஜரே, என்னை வெளியில் கொண்டு வாருங்கள், யாம் இனி பாவம் செய்யமாட்டோம். வெளியில் வந்ததும் மீண்டும் பாவம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். அங்கு கூறியதை அங்கேயே விட்டு விடுகின்றனர். இதுவும் நாடகமாகும். பாரதத்தின் மிகப் பெரிய எதிரி இராவணன், துவாபரத்திலிருந்து இராவண இராஜ்யம் ஆரம்பமாகிறது. துவாபாரத்திலிருந்து தான் தேவி தேவதைகள் விகாரமார்க்கத்தில் செல்கின்றனர். பிறகு அவர் களுக்கு கோவில் கட்டப்படுகின்றன. (ஜெகந்நாத்) பூரியில் கோவில் எப்படி கட்டியிருக்கின்றனர்! என்பதை பாருங்கள். உள்ளுக்குள் ஜெகந்நாத் மூர்த்தி இருக்கிறது, வெளியில் தேவதைகளின் மிக அசிங்கமான சித்திரங்கள் உள்ளன. இப்படிப் பட்ட சித்திரங்கள் கோவில்களில் இருக்கக் கூடாது. நீங்கள் இப்போது ஸ்ரீமத்படி சிரேஷ்டமானவர் கள் ஆவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். சத்யுக ஆரம்பத்தில் லெட்சுமி, நாராயணன் சிரேஷ்டமாக இருந்தனர் அல்லவா! அவர்கள் இந்த சிரேஷ்ட பதவி எப்படி அடைந்தனர்? இப்போது நீங்கள் மீண்டும் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் கல்ப கல்பம், கல்பத்தின் சங்கயுகத்தில் மீண்டும் வருகிறேன், வந்து கொண்டே இருப்பேன் என்று தந்தை கூறுகின்றார். மீண்டும் குழந்தைகளாகிய உங்களுக்கு இராஜயோகம் கற்பிப்பேன். மீண்டும் சதோ, ரஜோ, தமோவில் வருவீர்கள். நீங்கள் 84 பிறவிகள் எடுக்க

வேண்டியிருக்கிறது, யார் முதலில் வருகிறார்களோ, அனைவரும் அனுபவிப்பது கிடையாது. 84 இலட்சம் கிடையாது. யாரோ ஒருவர் என்ன கூறினாலும் மனிதர்கள் அது சத்தியம், சத்தியம் என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். ஒருவேளை 84 இலட்சம் பிறவிகள் எனில் கல்பத்தின் ஆயுள் அதிகமாக ஆகிவிடும். 84 பிறவிகள், அதுவும் தேவி தேவதைகள் எடுக்கின்றனர் என்று தந்தை கூறுகின்றார். நல்லது, பிறகு இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் போன்றவர்கள் எத்தனை பிறவிகள் எடுத்திருக்கக் கூடும்! கணக்கு இருக்கிறது அல்லவா! பலர் வருகின்றனர், கிளைகள் இருக்கிறது.

நீங்கள் முழு உலகின் முதல், இடை, கடையை அறிவீர்கள். பாரதம் தான் முதல் நம்பராக உலகிற்கு எஜமானராக இருந்தது. வேறு எந்த தர்மமும் இல்லாமல் இருந்தது. இப்போது அந்த தேவி தேவதா தர்மம் கிடையாது. அதன் சாஸ்திரமும் கிடையாது. இந்த கீதை போன்ற சாஸ்திரங்கள் மீண்டும் உருவாகும். நீங்கள் எந்த சத்தியமான கீதை என்று உருவாக்குகிறீர்களோ அது மட்டுமே இருக்கும் என்பது கிடையாது. அதே உண்மையான கீதை தான் மீண்டும் வெளிப்படும். பக்தி மார்க்கத்திற்காக அனைத்தும் தேவை அல்லவா! குழந்தைகளுக்கு பிரம்மாவின் மூலம் புரிய வைக்கின்றார். இப்போது பிரம்மாவின் மூலம் பகவானை (பக்தியின்) பலனாக அடைகிறீர்கள். இவையனைத்தும் பக்தி மார்க்கம் என்று பாபா கூறுகின்றார். நான் இங்கு பாரதத்தில் வரும் போது தான் என்னை (பக்தி செய்ததின்) பிராப்தியாக அடைகிறீர்கள். பாரதம் தான் அழிவற்ற கண்டமாகும். பாரதம் தான் எவ்வளவு செல்வந்த கண்டமாக இருந்தது. சோமநாத கோவில் எவ்வளவு பெரிதாக இருக்கிறது! அனைத்தையும் கொள்ளையடித்து சென்று விட்டனர். பிர்லாவிடம் அதிக செல்வம் இருக்கிறது எனில் எவ்வளவு பெரிய கோவில் கட்டியிருப்பார்! தந்தை எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கின்றார்! இவ்வாறு வேறு யாரும் புரிய வைக்க முடியாது. ஞானக் கடலான தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கும் போது தான் குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர். இந்த படிப்பை கற்பிப்பது யார்? இவர் எந்த சந்நியாசியும் கிடையாது. அவரது பெயர் சிவன். அனைத்து ஆத்மாக்களும் அவரது குழந்தைகள். மற்றவர்களது சரீ ரங்களின் பெயர்கள் மாறிக் கொண்டே இருக்கும். இவரது பெயர் ஒன்றே ஒன்று தான். எனக்கு வேறு எந்த பெயரும் கிடையாது என்று கூறுகின்றார். நீங்கள் பிறப்பு, இறப்பில் வருகிறீர்கள், தேக அபிமானிகளாகவும் ஆகிறீர்கள். நான் ஒருபோதும் தேக அபிமானியாக ஆவது கிடையாது. தந்தை சதா ஆத்ம அபிமானியாக இருக்கின்றார், ஏனெனில் பிறப்பு, இறப்பில் வருவது கிடையாது. சிவராத்திரி கொண்டாடுகிறீர்கள் அல்லவா! ஆனால் இராத்திரி என்பதன் பொருள் புரிந்து கொள்வது கிடையாது. எவ்வளவு பெரிய தவறாகும்! இப்போது இரவாக இருக்கிறது, பிறகு பகல் ஏற்படும். இப்போது கல்பத்தின் கடைசி அதாவது இரவு ஏற்பட்டிருக்கிறது. சத்யுகம், திரேதா பகலாகும். துவாபர், கலியுகம் இரவாகும். நான் சங்கமத்தில் தான் வர வேண்டியிருக்கிறது. இது எல்லையற்ற இரவு மற்றும் பகலாகும். பகவானின் மகாவாக்கியம், இந்த நேரம் முக்கியமானது என்று புரிய வைக்கின்றார். ஆனால் சிவபாபாவின் (வரும்) நேரம் யாரும் கணக்கிட முடியாது. அவர் எப்போது வருகின்றார்? என்பது யாருக்கும் தெரியாது. ஆக இது எல்லையற்ற பகல் மற்றும் இரவாகும், இதை கல்பத்தின் சங்கமம் என்று கூறலாம். ஒருவேளை பிறந்த நாள் என்று கொண்டாட வேண்டுமெனில் அது ஒரே ஒருவருக்கு

மட்டுமே. சிவபாபா வருகின்றார் பிறகு சென்று விடுகின்றார். அவருக்கு பிறப்பும் கிடையாது, இறப்பும் கிடையாது. பாபா சென்று விட்டார் என்று கூறுவீர்கள், இது விளையாட்டாகும். தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார். செல்லும் வழியில் பிராமணர் மாட்டிக் கொள்கிறார். என்று பாடவும் செய்கிறீர்கள். இந்த பாபாவிற்கும் ஒன்றும் தெரியாது. திடீரென பிரவேசம் செய்து விட்டார். முன் கூட்டியே தெரியாது. இது பாபாவின் காரியம் என்று மெல்ல மெல்ல தெரிய வந்தது. இந்த ஞான வேள்வி மூலம் விநாச நெருப்பு ஏற்படும். எல்லையற்ற யக்ஞத்தில் எல்லையற்ற பொருட்கள் அர்ப்பணம் ஆக வேண்டும். எல்லையற்ற தந்தையின் யக்ஞம் இதுவாகும். இதற்குப் பிறகு வேறு எந்த யக்ஞமும் உருவாக்கப்படமாட்டாது. பக்தி மார்க்கமே அழிந்து போய்விடும். இந்த ஞானத்தை புத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். படிப்பு படிப்பதற்கு வர வேண்டும். சிறிது சிரமங்கள் ஏற்படுகிறது. மனிதர்கள் படிப்பதற்காக இலண்டன், அமெரிக்காவிற்கு செல்கின்றனர். இது என்ன பெரிய விசயம்! தந்தை கூறுகின்றார் லி நான் கல்ப கல்பம், கல்பத்தின் சங்கமயுகத்தில் பரந்தாமத்திலிருந்து கற்பிப்பதற்காக வருகிறேன், ஆக குழந்தைகள் எவ்வளவு மரியாதை செலுத்த வேண்டும்! நாளடைவில் உங்களது கீதா பாடசாலை ஒவ்வொரு தெருவிலும் உருவாகும். இல்லையெனில் அனைவரும் எப்படி படிப்பார்கள்? பாபாவின் அறிமுகம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். தந்தையை அவசியம் அறிந்து கொள்வார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஸ்ரீமத் படி சதா மிகச் சிறந்தவர்களாக ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். படிப்பிற்கு சாக்கு போக்கு சொல்லக் கூடாது. படிப்பு அவசியம் படிக்க வேண்டும்.

2) எவ்வாறு ஆரம்பத்தில் தூய இல்லற ஆசிரமம் இருந்ததோ, அதே போன்று இப்போதும் தனது இல்லறத்தை தூய இல்லற ஆசிரமமாக ஆக்க வேண்டும். ஆத்ம சமர்ப்பணம் ஒரு தந்தைக்கே, அவரது குணங்களை மட்டுமே பாட வேண்டும்.

வரதானம்: ஒவ்வொரு பொக்கிஷத்தையும் சுயம் தனக்காகவும் அனைவருக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய அனுபவி மூர்த்தி ஆவீர்களாக.

உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்து, அனைத்து பொக்கிஷங்களில் நிறைந்தவராக ஆகி, அவற்றை சுயத்தின் காரியத்தில் அல்லது மற்றவர்களுக்காக செய்யும் சேவை காரியத்தில் பயன் படுத்துங்கள். கஜானாக்களை பயன்படுத்தும் பொழுது அனுபவி மூர்த்தி ஆகிக் கொண்டே செல்வீர்கள். கேட்பது, உள்ளடக்குவது மேலும் தக்கத் தருணத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவது லி இதே விதி மூலமாக அனுபவத்தின் அத்தாரிட்டியாக நீங்கள் ஆக முடியும். எப்படி கேட்பது, நல்ல தாக படுகிறது, பாயிண்ட்ஸ் (கருத்துகள்) மிகவும் நல்லவையாக சக்திசாலியாக இருக்கிறது, அதே போல அவற்றை பயன்படுத்தி சக்திசாலியாக வெற்றியாளராக ஆகி விடுங்கள்.

அப்பொழுது தான் அனுபவி மூர்த்தி என்று அழைக்கப்படுவீர்கள்.

சுலோகன்: யார் நிந்தனை செய்பவர்களுக்கும் குணங்களின் மாலைகளை அணிவித்துக் கொண்டே செல்கிறார்களோ, அவர்கள் தான் குணவான் என்று அழைக்கப்படுவார்கள்.